# மதுரை, கோவையில் மெட்ரோ ரயில் திட்டம்



கோயம்புத்தூரில் மெட்ரோ ரயில் திட்டத்தை அமைப்பது குறித்து மத்திய அரசுடன் கலந்துபேசி, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தை அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகள் தயார் செய்யப்படும்.

மத்திய நிதியமைச்சர் பட்ஜெட் உரையில் ஏற்கெனவே உறுதி அளித்தபடி, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் 2-ம் கட்டத்துக்கு பங்கு மூலதனத்துக்கான முறையான ஒப்புதலை விரைந்து வழங்குமாறும், அதற்கு இணையான மத்திய அரசின் பங்கினை விரைந்து வழங்குமாறும் மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும். மெட்ரோ ரயில் திட்டத்தில் கோடம்பாக்கம் முதல் பூந்தமல்லி புறவழித் தடத்துக்கான சேவைகள் வரும் 2025-ம் ஆண்டு ஜூன் மாதத்தில், அதாவது 4 ஆண்டுகளுக்குள் தொடங்கும். மெட்ரோ ரயில் திட்டத்தின் 2-ம் கட்டம் முழுவதும் 2026-ம் ஆண்டு டிசம்பருக்குள் முடிக்கப்படும். அதே நேரம், மெட்ரோ ரயில் திட்டத்தை விமான நிலையத்தில் இருந்து தாம்பரம் வழியாக கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிக்கும் பணியை தமிழக அரசு விரைவாக தொடங்கும்.